It will be circulated through various Departments. அப்படி வரும் போது, அரசு பரிசீலனை செய்து சாதகமான முடிவு எடுப்பதற்கு முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே தீர்மானம் அரசுக்கு வந்து எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் செயலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவது என்பது, டிபாட்மென்டுக்கு வந்து. செயலாளரிடம் இருந்து என்னிடம் வந்து உடனே கூட முடிவு எடுத்துவிடுவோம். அதைத்தான் எப்போதும் செய்துவருகிறேன் அதேபோல் நாகர்கோவில் விஷயத்திலும் முடிவு எடுப்போம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சிகள் மட்ட அளவில் அமுல்படுத்தப்படுகின்றன. பேரூராட்சிகளிலும் அமுல்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நகராட்சிக்கே முடியவில்லை. அப்புறம் பேரூராட்சிக்கு எங்கே வருவது.

பாக்கம்பாடி அணை சீரமைப்புத் திட்டம்,

* வினா எண். 728—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட வெள்ளாற்றில் பாக்கம்பாடி அணை சீரமைப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) அதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) இது தலைமைப் பொறியாளரின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

(ஆ) மதிப்பீடு விபரங்கள் ஆய்வு முடிந்த பின்னர் தான் கிடைக்கும்.

(இ) இத்திட்டத்தின் மூலம் 2,304 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராசு: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த பாக்கம்பாடி அணைத் திட்டத்தினால் 2,300 ஏக்கர் பாசனம் பெற இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல திட்டம். அந்தப் பகுதி வறட்சியான பகுதி. இந்தத் திட்டத்திற்கு என்ன மதிப்பீடு என்று அறிய விரும்புகிறேன்.

1982 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, அந்தத் திட்டம் மேலும் ஆய்வு செய்யப்பட்டு இப்போது 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக செலவாகும் என்று கருதப்படுவதால் அதை ஒரு நடுத்தரப் பாசனத் திட்டமாக திரும்பவும் ஆய்வு செய்வதற்கு வேறு ஒரு பிரிவுக்கு மாற்றப்பட்டு, மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நடுத்தரத் திட்டமாக ஆய்வு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். கடந்த 10 ஆண்டுக் காலமாக வெள்ளக் காலத்தில் அந்தத் தண்ணீர் எல்லாம் கடலுக்கு வீணாகப் போகிறது. இது நீண்ட காலமாக இருப்பதால் உடனடியாகச் செய்ய அரசு முன்வருமா? நடுநிலைத் திட்டமாகச் செய்தால் வெள்ளக் காலத்தில் அதிகமாக வரும் தண்ணீரை பக்கத்தில் இருக்கிற கண்மாய்களுக்கு திருப்பிவிட வசதி இருப்பதால் அரசு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் முதலிலே ஆய்வு செய்து அணையைக் கட்டலாம் என்ற முடிவுக்கு வந்தபோது இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தொழுதூர் ரெகுலேட்டர் மற்றும் வெல்லிங்டன் பாசன ஏரிக்கு நீரின் வரத்து சுமார் 250 கன அடி குறைந்துவிடும் என்றும் அதனால் விவசாயம் பாதிக்கும் என்றும் அந்தப் பகுதி விவசாயிகள் ஆட்சேபம் தெரிவித்தார்கள். இருந்தாலும் அது பற்றி ஆய்வு செய்து, இப்போது ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதாவது இன்னும் சுமார் 30 நாட்களுக்குள் முடிந்துவிடும். அறிக்கை வந்தவுடன் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம்.

* வினா எண். 729— திரு. பெ. சு. திருவேங்கடம்: திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சார்பில் ஆந்திர பிரதேச முதல்வர் அவர்களை சந்தித்து சென்னைக்கு கிருஷ்ணா ஆற்று தண்ணீரைக் கேட்டு பேச்சு வார்த்தை நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆந்திர மற்றுந் தமிழக முதல்வர்களிடையே இத்திட்டத்தின் ஆய்வு வேலைகள், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆய்வுப் பணிக்காக இரு மாநிலங்களும் நிதி ஒதுக்குவது பற்றி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இக்கூட்டத்தில் தீர்மானித்தபடி இரு மாநிலங்களிலும் ஆய்வு வேலைகள் தொடங்கப்பட்டன. தமிழக எல்லைக்குள் ஆய்வு வேலை முடிந்துவிட்டது. ஆந்திர